**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II - 2017**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II இன் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2001 பெப்ரவரி 20 ஆந் திகதிய ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையேயான உடன்படிக்கையின் கீழ் வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் மீதான விரிவான வடிவமைப்பு ஆய்விற்கு 580 மில்லியன் ஜப்பானிய யென்களுக்கு நிகரான ரூபா 417 மில்லியன் மானியத்துடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் கீழ் கடுவெல தொடக்கம் கடவத்தை வரையிலான 8.9 கிலோமீட்டர் வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் பிரிவினை நிர்மாணிப்பதற்கு முறையே 2008 யூலை 29 மற்றும் 2011 மார்ச் 22 ஆந் திகதிகளில் SL-P91 மற்றும் SL - P101 எனும் உடன்படிக்கைகள் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்குமிடையே உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுமிருந்தன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தினது II ஆம் கட்டத்திற்கான கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் தற்போதைய உயர் கல்வி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சும் முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் நிறைவேற்று முகவர் நிலையங்களாகும். வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவர் நிலையமாகும். கொழும்பு நகர்ப்புற பிராந்திய போக்குவரத்து நெரிசலைக் குறைத்து நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்வதற்கு கொழும்பு நகரை மையமாகக் கொண்டு தெற்கு அதிவேகப் பாதை மற்றும் ஏனைய தேசிய வீதிகளை இணைப்பதற்கான அதிவேகப் பாதையைக் கொழும்பின் புறநகர்ப் பிரதேசத்தில் நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் II ஆம் கட்ட மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 44,097 மில்லியன் ஜப்பானிய யென்களுக்கு நிகரான ரூபா 55,482 மில்லியனாகும். அதில் 37,406 மில்லியன் யென்களுக்கு நிகரான ரூபா 46,759 மில்லியன் ஜப்பானிய சர்வதேசக் கூட்டுறவு முகவர் நிலையத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியிருந்தது. செயற்திட்டத்தின் II ஆம் கட்ட நிர்மாண வேலை 2009 ஒக்டோபர் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015 யூலை 18 மாதமளவில் முடிவடையவிருந்தது. எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதி, பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் ஏற்படும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நெடுஞ்சாலையின் நிர்மானச் செலவுகள் தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது இருப்பினும் கடுவெல தொடக்கம் கடவத்த வரையான நெடுஞ்சாலையின் நிர்மான வேலைகள் 2015 ஜுலை 18 இல் முடிவடைந்திருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 24.20 மில்லியன் கூட்டுத் தொகையான உசாத்துணையாளர்களுக்கான கொடுப்பனவு செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதியப் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாடு, மீளாய்வாண்டின்போதும் 2017 டிசெம்பர் 31 வரையுமான நிதியப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரம் கீழே காணப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | பாதீட்டு மதிப்பீட்டில் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 டிசெம்பர் 31 வரை | |
| | ஜப்பானிய யென் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் | ரூபா மில்லியன் |
| ஜெஅய்சீஏ | | | | | | | |
| கடன் இல-SL-P91 | 5,718 | 5,445 | 350 | | | | |
| கடன் இல-SL-P101 | 31,688 | 41,314 | | 278.59 | 370.69* | 34,814.48 | 46,324.15 |
| ஜீஓஎஸ்எல் | 6,691 | 8,723 | 100 | 64.63 | 86 | 1,089.00 | 1,449.03 |
| **மொத்தம்** | **44,097** | **55,482** | **450** | **343.22** | **456.69** | **35,903.48** | **47,773.18** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கடுவெல முதல் கடவத்தை வரையிலான 8.9 கிலோமீற்றர் வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலையினது நிர்மான வேலைகள் ரூபா 44.88 பில்லியன் மதிப்பிட்ட கிரயத்தில் 2015 யூலை 18 ஆந் திகதியன்று முடிவுருத்தப்பட்டிருந்தது. 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாரான உறுதிப்படுத்தப்பட்ட வேலையின் பிரகாரம், நிர்மான வேலைக்கான மொத்த செலவு ரூபா 47.82 மில்லியனாகும். இருப்பினும், பின்னர் அனுமதிக்கப்பட்ட 190 நாட்கள் நீடிப்பு காலத்தின் அடிப்படையில் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட நீடிப்புச் செலவுகள் மீதான அறவீடு ரூபா 4.37 பில்லியன் 2017 டிசெம்பர் 31 வரை செலுத்தப்படாமல் காணப்பட்டது இது சர்ச்சை தீர்ப்பு வாரியத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டிலுள்ள விடயங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66.41 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிலுள்ள காலதாமதம் காரணமாக பணவளிப்பற்ற கடன் மீதி மீது கடன் வழங்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது.

### 3.4 காணிச் சுவீகரிப்பும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தினால் சுவீகரிக்க பட்டியலிடப்பட்டிருந்த 1,323 காணித்துண்டுகளில் 1,205 காணித்துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தன. மேலும் 2017 டிசெம்பர் வரை ரூபா 1,786 மில்லியன் கூட்டுத் தொகையான இழப்பீடு வழங்கப்பட்டுமிருந்தது. இருப்பினும் குறித்த திகதிவரை 614 காணித்துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதியப்பட்டிருந்தது. அரச காணிகள் உள்ளடங்களாக சுவீகரிக்கப்பட்ட காணித்துண்டுகளை சரிபார்க்க தேவையான முறையான ஆவணங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பியகமவில் உள்ள றுக்கதனகஹவத்த எனும் இடத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களை 28 காணித்துண்டுகளில் மீள் குடியேற்றம் செய்வதற்கு செயற்திட்டம் ரூபா 22.8 மில்லியன் செலவில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. பருவகால வெள்ளப்பெருக்குகளை தடுப்பதற்கு உரிய காணித்துண்டுகளை பிரித்து கேபியன் சுவர்

நிர்மானம் செய்வதன் காரணமாக அதில் 07 காணித்துண்டுகள் மீள் குடியேற்றம் செய்வதற்கு பொருத்தமற்றதாக காணப்பட்டது.

(இ) காணி கொள்வனவிற்கான இழப்பீடு செலுத்துவதில் காணப்பட்ட தாமதம் காரணமாக 2017 டிசெம்பர் 31 இல் இழப்பீட்டு தாமத வட்டியாக ரூபா 301.60 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

### 3.5 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்

இருப்பினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் கடன் காலம் என்பன 2015 ஜுலை 18 இல் முடிவடைந்து காணப்பட்டது, செலுத்த வேண்டிய மீதிகளை கொடுத்து தீர்ப்பதற்கும் செயற்திட்டத்தின் கணக்குகளை மூடுவதனூடாக செயயற்திட்ட கண்காணிப்பு பிரிவை முடிவுக்கு கொண்டு வருவதற்குமான பொறுப்பை அமுல்படுத்தல் முகவருக்கு மாற்றுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் நிறைவேற்றல் முகவரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.